## அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–6.
## மேல்நிலை முதலாம் ஆண்டு மார்ச்–2018
## பகுதி–1 பொதுத் தமிழ் இரண்டாம் தாள்
## விடைக்குறிப்புகள்

விடைத்தாள் மதிப்பிடும் போது கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப்பிழை,ஒற்றுப்பிழை,இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.

4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளை (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.

6. மிகையாக விடை இருப்பின் 'மிகை' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின்'மீண்டும்' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | **பகுதி–I** | |
| | **மொழிப்பயிற்சி** | **20x1=20** |
| 1 | **அமுதம்/அமிழ்தம்** போல் **பெய்த/பொழிந்த** மழை கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். | |
| 2 | கண்ணகித் தெய்வத்திற்குக் கயவாகு மன்னன் பத்தினிக் கோட்டம் எடுத்துச் சிறப்பித்தான். | |
| 3 | **மழைநீர் சேமிப்பை/சேகரிப்பைப்** பற்றி எல்லார்க்கும் சொல்வோம். | |
| 4 | ஆலமரத்தின் விழுதினைப் பாம்பென்று குரங்கு அஞ்சியது. | |
| 5 | **பனந்தோப்பில்/பனங்காட்டில்** ஆந்தை அலறுவது கேள். | |
| 6 | ஒலி – **ஓசை**<br>ஒளி – **வெளிச்சம்** | |
| 7 | **மாலையில் /பொழுது சாயுங்காலம்** நேரத்தோடு வரவில்லையானால் அம்மா திட்டுவார். | |
| 8 | பெண்கள் பெற **வேண்டியவை/வேண்டுவன** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை. | |
| 9 | தமிழ் நாடு மின்சார வாரியம் | |
| 10 | ஏரிகளில் மழைநீர் சேமித்தால் கிணறுகளில் நீர் வற்றாது. | |
| 11 | **"ஐயனே! நான் போகலாற்றேன்; ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன்", என்று கூறினான் குகன்.** | |
| 12 | மரத்கடைப் பக்கம் போகாதே; இழைப்புளி தூசி ஒவ்வாது. | |
| 13 | நாளை **தேரோட்டம்/தேர்த்திருவிழா;** அதனால் எல்லாச் **செயலகங்களுக்கும்/அலுவலகங்களுக்கும்** விடுமுறை அறிவிக்கப்படுகிறது. | |
| 14 | ஊன்- **இறைச்சி,** ஊண் - **உணவு** | |
| 15 | ஊறுகாய் வைத்தால் பழையசோறு உள்ளேபோகாதோ? | |
| 16 | காலை – **பொழுது** , காளை- **எருது** | |
| 17 | இன்றும் நம் நாட்டில் பெருவாரியான மக்கள் உள்ளார்க**ளே.** | |
| 18 | மனைக்கு விளக்காக விளங்குபவர் **யார்?** | |
| 19 | உவகை (அல்லது) பெருமிதம் | |
| 20 | முத்தமிழ்: **இயல், இசை, நாடகம்** | |
| | **பகுதி- II** | **7x2=14** |
| | பின்வரும் வினாக்களுள் வினா **எண் 30**- க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள **21** முதல் **29** வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக | |
| 21 | **ஔவையார் கூறும் கல்வியின் சிறப்புகள்**<br>1. மன்னர், குற்றமறக் கற்றவர் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு நோக்கினால் கற்றவர் மன்னரைக் காட்டிலும் சிறந்தவர்.<br>2. மன்னருக்குத் தம் தேசமல்லாமல் பிற தேசங்களில் சிறப்பு கிடையாது.<br>3. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. | |
| 22 | **பொருட்சுவை ஒன்பது:**<br>**1.** நகை<br>**2.** அவலம்<br>**3.** இழிப்பு<br>**4.** வியப்பு<br>**5.** அச்சம்<br>**6.** வீரம்<br>**7.** வெகுளி<br>**8.** உவகை<br>**9.** சமனிலை | |

| | | |
|---|---|---|
| 23 | **பட்டினத்தார் போற்றிய மூவர்:**<br>1. சிறுத்தொண்டர்<br>2. திருநீல கண்டர்<br>3. கண்ணப்பர் | |
| 24 | **கங்கை வேடன் இறைவனுக்கு அளித்த காணிக்கைகள்:**<br>1. மீன்<br>2. கொம்புத் தேன் | |
| 25 | **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இளமையில் கேட்டதாகக் கூறும் முடிமக்கள் கதைகள்:**<br>1. விக்கிரமாதித்தன் கதை<br>2. மதனகாமராசன் கதை<br>3. திருவிளையாடல் கதை<br>4. நளன் கதை<br>5. அரிச்சந்திரன் கதை<br>6. துரியோதனன் கதை<br>7. இராமர் கதை | |
| 26 | **ஓய்வு குறித்து அறிஞர் அண்ணா கூறுவன:**<br>1. ஓய்வு என்பது ஒரு உரிமை. இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும்வேலையிலே ஈடுபடுவதற்கான மாமருந்து.<br>2. மனத்துக்குத் தெம்புதரும் வகையில் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும். தூங்குவது மட்டும் ஓய்வல்ல. | |
| 27 | **திருமூலர் காட்டும் அன்பு நெறி:**<br>1. அன்பே சிவம்.<br>2. அன்போடு உருகி அகம் குழைந்தால் இறைவனை எளிதில் பெற்று அனுபவிக்கலாம். | |
| 28 | **அன்பு நெறி பற்றி புத்தபிரான் கூறுவன:**<br>1. தாய் தன் உயிருக்கு ஆபத்து வருவதையும் கருதாது தன் ஒரே பிள்ளையைப் பாதுகாப்பது போல மனிதன் எல்லா உயிர்களிடமும் எல்லையற்ற அன்பு கொண்டிருக்க வேண்டும்.<br>2. பகையோ விரோதமோ இல்லாமல் அகில உலகினிடமும் அன்பு கொண்டு வாழ வேண்டும். | |
| 29 | **கல்வெட்டுத் துறையால் தமிழர்க்குக் கிடைத்த நலங்கள்:**<br>1. மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியது.<br>2. கல்வெட்டுகள் தமிழ்மொழியில் எழுதப்பெற்றுள்ளவை என அறிய முடிந்தது. | |
| 30 | **பண்டைத் தமிழக மக்களின் இறைவழிபாட்டு முறையை நெடுநல்வாடை குறிப்பிடுவது:**<br>1. சிவன்,திருமால்,குமரவேள்,புத்தர்ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர்.<br>2. வீட்டிலும் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினை ஏற்றி நெல்லும் மலருந்தூவி வழிபட்டனர். | |

| | | 7x3=21 |
|---|---|---|
| | **பகுதி-III** | |
| | பின்வரும் வினாக்களுள் வினா எண் **40**- க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள **31** முதல் **39** வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக | |
| 31 | **பெண் கல்வியை வலியுறுத்தி அடிகளார் உரைப்பன:**<br>1. மக்களாய்ப் பிறந்த எல்லோர்க்கும் கல்வி இன்றியமையாதது .<br>2. இவ்வுலக வாழ்க்கையை நன்றாய் நடத்துதற்கு ஆண்மக்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டியவராய் இருப்பவர்கள் பெண்கள்.<br>3. உண்மை அறியாதவர்கள், ஆண்களுக்கு மட்டுமே கல்வி என்பர். | |
| 32 | **பழந்தமிழரின் படைமாட்சி :**<br>1. கூற்றுவனே எதிர்கொண்டு தாக்கவந்தாலும்அதனையும் எதிர்த்து நின்று போராடும் மனவலிமை கொண்டதே படைமாட்சி"- திருவள்ளுவர்.<br>2. பகைவரை வெகுண்டு நோக்கிய கண் அவர் வேல் கொண்டு எறியுமிடத்து இமைத்துவிடுமாயினும் வீரர்க்கு அதுவே தோல்வி.<br>3. தன்மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித் திரியும் வீரன் ஒருவன் தன் மார்பிலே தைத்துக் கிடந்த வேலினைக் கண்டு மகிழ்கின்றானாம்! என்னே தமிழருடைய ஆண்மை! | |
| 33 | **'சுவை' என்பதன் விளக்கம்:**<br>1. 'சுவை' என்பது **'மெய்ப்பாடு'** என்றும் கூறப்படும்<br>2. 'சுவை' என்ற தமிழ்ச்சொல்லும், **'ரஸம்'** என்ற வடசொல்லும் ஒரே பொருள் உடையன.<br>3. நாவினால் நுகரப்படும் சுவை ஆறு.<br>4. செவியால் நுகரப்படுவன குண அலங்காரங்களாகிய சொற்சுவைகளும் ஒன்பது வகையான பொருட்சுவைகளும் ஆகும். | |
| 34 | **இராமனை வெல்லக் கருதிப் படைகொண்டு வந்ததாகக் கருதிய கங்கை வேடனின் வீரமொழிகள்:**<br>1. என் காவலில் அமைந்த கங்கையைக் கடந்திவர் போவாரோ ?<br>2. என்னைத் தோழன் என்று சொல்லிய சொல் ஒப்பற்றது.<br>3. நான் நன்றி மறவாத நாய் போன்றவன்.<br>4. போரில் நான் இறந்த பின்னன்றோ, பரதன் இராமனைப் பார்க்க வேண்டும். | |
| 35 | **திருவள்ளுவரின் ஒழிபியல் கருத்து:**<br>1. திருவள்ளுவர் தாம் வகுத்த பொருட்பாலில் குடிகளது சிறப்பினைக் கடைசி பதிமூன்று அதிகாரங்களில் கூறுகிறார்.<br>2. குடிமக்களை இடைக்காலத்தில் தமிழ்நாடு மறந்ததும் உண்டு.<br>3. குடியியலின் நுட்பத்தினை ஒழிபியலில் வைத்தல்.<br>4. ஒழிபியல் அனாமத்துக் கணக்கில்லை.<br>5. நாட்டின் உயிர் நிலை, பொருட்பாலின் முடி மணி. | |
| 36 | **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் முறை:**<br>1. ஓய்வு என்பது தூக்கத்தால் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்வது மட்டுமல்ல.<br>2. உள்ளத்திலே உள்ள சோர்வினைப் போக்கிக் கொள்ள உலவுவது, உரையாடுவது, பாடுவது, ஆடுவது, ஆடல் காண்பது, பாடல் கேட்பது, குழந்தைகளுடன் கொஞ்சுவது, இவ்விதமான ஏதாவதோர் செயலில் ஈடுபட வேண்டும். | |

| | | |
|---|---|---|
| 37 | **உழைப்பால் ஏற்பட்ட உள்ளத் தேய்வை நீக்கும் முறை:**<br>1. உறக்கத்தை மட்டும் நாடாமல் நண்பர்களுடன் பேசி மகிழ்வது,குழந்தைகளுடன் விளையாடுவது முதலியவற்றுள் ஏதேனும் ஒரு பொழுது போக்கிலே ஈடுபடுதல்.<br>2. தெருக் கூத்து பார்த்தல்.<br>3. இயற்கைக் காட்சிகளைக் காணுதல்.<br>4. தெம்மாங்கு கேட்டல். | |
| 38 | **சமயங்களின் ஒருமித்த குரல் குறித்து அடிகளார் கூறுவன :**<br>1. அன்பு காட்டு, உதவி செய்.<br>2. பகையை மற, பண்பு பாராட்டு .<br>3. உயிர் வர்க்கத்தின் மகிழ்ச்சிப் புனலால் இறைவனின் திருப்பாதங்களைக் குளிப்பாட்டு. | |
| 39 | **சிலாசாசனங்கள்:**<br>1. கோயில்களின் கருவறையின் கருங்கற் சுவர்களின் மேல் வரிசை வரிசையாய் உள்ள எழுத்துக்கள்.<br>2. அவை சிற்றுளி கொண்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டன.<br>3. அத்தகைய கல்வெட்டுகளே சிலாசாசனங்கள் என அழைக்கப்படும். | |
| 40 | **முதுகுடி மகளிரின் வீரம்:**<br>1. ஆடவரைப் போன்றே முதுகுடி மகளிருக்கும் வீர உணர்ச்சி உண்டு.<br>2. தன் ஒரே மைந்தனைப் போர்க் கோலம் புனைவித்து போர்க்களம் நோக்கிச் செல்க! என அனுப்பிய தாயின் வீரம்.<br>3. நரை மூதாட்டி தன் முதுமைப் பருவத்து அருமையாய்ப் பெற்ற ஒரு தனி மகனும் போரில் இறக்க வருந்தாது, ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்தல். | |
| | **பகுதி – IV** | **7x5=35** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | |
| 41 | **கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுதல் வேண்டும்**<br>பத்திப்பிரிவு – உட்தலைப்பு – கதைமாந்தர் பெயர்கள் சரியாக எழுதுதல் வேண்டும்.<br>முன்னுரை , முடிவுரை, கதை ஆசிரியர் பெயர் } – 2 மதிப்பெண்கள்<br>கதைச்சுருக்கம், உட்தலைப்பு – 3 மதிப்பெண்கள்<br>**<u>ஒரு நாள் கழிந்தது</u>**<br>**<u>ஆசிரியர் : புதுமைப்பித்தன்</u>**<br>முருகதாசரின் வீடு – முருகதாசரின் கற்பனையும் வறுமையும் – கடைக்காரர் பழைய பாக்கி – ரிக்ஷாவில் அலமு – சுப்பிரமண்ய பிள்ளையிடம் கடன்வாங்கல் – முருகதாசரும் எட்டணாவும் – ஒரு நாள் கழிந்தது.<br>**(அல்லது)**<br>**<u>மறுமணம்</u>**<br>**<u>ஆசிரியர் : விந்தன்</u>**<br>கதாநாயகன் மனைவியின் மறைவும் துயரமும் – எதிர்வீட்டுத் தோழி சீதா – இராதைக்குக் காய்ச்சல் – கதாநாயகன் சீதாவை மறுமணம் செய்து கொள்ள விரும்புதல் – கடிதம் எழுதுதல் – சீதாவின் பதில் கடிதம் – திருமணம் ஒரு முறைதான் . | |

| | | |
|---|---|---|
| 42 | **கதை மாந்தர் திறனாய்வு**<br>முன்னுரை, முடிவுரை, கதை மாந்தர் – 2 மதிப்பெண்கள்<br>கதைச்சுருக்கம்,<br>கதை மாந்தர்களின் பண்பு நலன்கள் - } 3 மதிப்பெண்கள்<br>உட் தலைப்பிட்டு விளக்குதல்<br>**(திறனாய்வு வடிவில் இல்லாமல் கதைச் சுருக்கமாக எழுதியிருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்)**<br>**செங்கமலமும் ஒரு சோப்பும் –**<br>கௌரிக்குட்டியின் பாத்திரப் படைப்பு<br>**ஆசிரியர் : சுந்தர ராமசாமி**<br>கிருமிகள் பற்றிச் செங்கமலம் – கௌரிக்குட்டி சொன்னதெல்லாம் செய்பவள் – நாகரிகத் தோழி – செங்கமலத்தின் சந்தேகம் – கௌரியின் கேள்வி – உண்மையை வெளிப்படுத்துபவள் – ஆறுதல் கூறுபவள்<br>**(அல்லது)**<br>**சங்கரன் : பாத்திரப் படைப்பு**<br>**கதை : கரையும் உருவங்கள்**<br>**ஆசிரியர் : வண்ணநிலவன்**<br>சங்கரன் வேலையில்லா இளைஞன் – இரவில் வீடு திரும்புதல் – செருப்பு அறுதலும் வேதனையும் – தூக்கம் வராமல் தவிப்பு – காசுக்காக ஏக்கம் – வேலை தேடி அலைதல் – தேவைகளைக் குறைத்தல் – தமக்கையின் ஆறுதல் | |
| 43 | **உரையாடல் அமைப்பு – 2 மதிப்பெண்கள்**<br>**கருத்து – 3 மதிப்பெண்கள்**<br>குறிப்பு – (உரையாடல் வடிவில் எழுதாமல் கதைச் சுருக்கமாக எழுதியிருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம் )<br>**நாணா அத்தைக்கும் கைலாசத்திற்கும் நடந்த உரையாடல்**<br>**கதை : விழிப்பு**<br>**ஆசிரியர் : சிவசங்கரி**<br>கைலாசம் தெருவில் கண்ட காட்சிகள் – அத்தையின் நினைவுகள் – நாணா அத்தைக்கும் கைலாசத்திற்கும் நடந்த உரையாடல் – 'சமூகசேவகி' என அழைத்தல் பிடிக்காமை – உடம்பையும் வீட்டையும் காப்பது போல சுற்றுப்புறத்தையும் காக்க வேண்டும் – நம் கடமைகளையும் பொறுப்புகளையும் சரியாகச் செய்தால் அரசின் உதவியை நாடத் தேவையில்லை – கொண்டாட்டங்கள் என்றால் குடிப்பதும் புகைப்பதும் தானா? பெற்றவர்கள் சம்பாத்தியத்தில் செலவழிப்பது தவறாகத் தெரியவில்லையா? அத்தையின் அறிவுரைகள் – நண்பனின் மனமாற்றம்<br>**(அல்லது)**<br>**நாடக வடிவில் எழுதுதல்**<br>நாடக அமைப்பு : 2 மதிப்பெண்கள்<br>நாடக வடிவில் உரையாடல் எழுதுதல் : 3 மதிப்பெண்கள்<br>குறிப்பு – (நாடக வடிவில் எழுதாமல் கதைச் சுருக்கமாக எழுதியிருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம் )<br>**ஒரு பிரமுகர்**<br>**ஆசிரியர் : ஜெயகாந்தன்**<br>வேலமரப்பொந்து – கட்டெறும்பின் செயல் – கட்டெறும்பின் கர்வம் – மழைபெய்தல் – பிரளயம் வந்தது என அலறுதல் – ஓடி ஒளிதல். | |

| | | |
|---|---|---|
| 44 | <u>கற்பனைக் கதை</u><br>" என்றைக்கும் ஆபத்து பிக்பாக்கெட்'' என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சியவன் மனம் திருந்தி உயர்தல்<br>தலைப்பு , கதைத் தொடக்கம் – 1 மதிப்பெண்<br>கருப்பொருள் வளர்ச்சி – 1 மதிப்பெண்<br>கற்பனைத் திறன், கதைச்சிக்கல் – 2 மதிப்பெண்கள்<br>கதை முடிவு – 1 மதிப்பெண்<br>**(முன்னுரை, முடிவுரை, உட்தலைப்பு இல்லாமல் கதை வடிவில் மேற்கண்ட அமைப்பில் கதை அமைந்திருந்தால் மட்டும் முழுமதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)**<br>**<u>புரொபசர் சீனிவாசனின் வீட்டைக் கண்டுபிடிக்க ஆசிரியர் பட்ட துயரங்கள்</u>**<br>**<u>கதை : அனந்த சயனம் காலனி</u>**<br>**<u>ஆசிரியர் : தோப்பில் முகமது மீரான்</u>**<br>பேருந்துப் பயணம் – டீக்கடைக்காரரிடம் வினவுதல் – பெண்ணிடம் முகவரி கேட்பு – வெறிச்சோடிய தெருக்கள் – ஏ,பி,சி தெருக்களில் தேடுதல் – சங்கர் ஐ.ஏ.எஸ். வீடு - கிழவரின் சந்திப்பு – கண்டுபிடிக்க இயலாமை. | |
| 45 | ஆசிரியர் குறிப்பு – 1 மதிப்பெண்<br>திரண்ட கருத்து – 2 மதிப்பெண்கள்<br>மையக்கருத்து – 2 மதிப்பெண்கள்<br>**(அல்லது)**<br><u>நயம் பாராட்டல்</u><br>எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம், அணி மற்றும் பிறநயங்களுள் ஏதேனும் ஐந்து எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு நயத்திற்கும் ஒரு மதிப்பெண் | |
| 46 | **<u>பழமொழியை விளக்கி வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுதல்</u>**<br>நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் (அல்லது)<br>சிறுதுளி பெரு வெள்ளம்<br>பழமொழி விளக்கம் – 2 மதிப்பெண்கள்<br>ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு – 3 மதிப்பெண்கள்<br>**(வாழ்க்கை நிகழ்வின்றி கருத்து மட்டும் விளக்கி இருந்தால் மூன்று மதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)**<br>**<u>கவிதை எழுதுதல் ( 8 முதல் 10 வரி)</u>**<br>**<u>தலைப்பு: தாயன்பு (அ) செந்தமிழ்</u>**<br>மரபு / புதுக்கவிதையாக இருக்கலாம்.<br>**(பிறமொழிக் கலப்பின்றி சொந்தப் படைப்பாக இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | |

| | | |
|---|---|---|
| 47 | <u>தமிழாக்கம்</u><br>அ. வருமுன் காப்போம் / வெள்ளம் வருமுன் அணைபோடு<br>ஆ.புயலுக்கு முன் அமைதி<br>இ.அகத்தின் அழகு முகத்தில் தெரியும்<br>ஈ. இந்திய மக்கள் ஒரு போதும் வன்முறையை விரும்ப மாட்டார்கள்.<br>உ. ஒரு சிறந்த ஆசிரியர் மாணவர்களுக்கு நல்ல நண்பராகவும், தத்துவ ஞானியாகவும் மற்றும் வழிகாட்டியாகவும் இருப்பார்.<br>**(அல்லது)**<br>அ. நல்லவருக்கு உலகம் நல்லதாகவே அமையும்.<br>ஆ. புதிய சவால்களை ஏற்றுக்கொள். புதிய அனுபவங்கள் நீ வளர்வதற்கு உதவும்.<br>இ. ''கோயில்களின் நகரம்'' என மதுரை அழைக்கப்படுகிறது.<br>ஈ. ஆழம் அறியாமல் காலை விடாதே.<br>உ. அன்பை / அருளை விலைக்கு வாங்க முடியாது. | |